## சுருக்கம்

பழங்குடியினர் நலம் – 2011–12 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம், மு. பாலாடாவில் உள்ள பழங்குடியினர் ஆய்வு மையத்தில் கட்டிட பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.49.29 இலட்சம் நிதி ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (பமே 2) நலத்துறை

அரசாணை (நிலை) எண். 90 நாள் : 24.10..2011

ஐப்பசி 7, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:–

பழங்குடியினர் நல இயக்குநர் கடிதம் எண்.பமேஆ1/1743/2011 நாள் 20.5.2011.

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பழங்குடியினர் நல இயக்குநர், 2011–12 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம், மு. பாலாடாவில் உள்ள பழங்குடியினர் ஆய்வு மையத்தில் கட்டிட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.49.29 இலட்சம் நிதி ஒப்பளிப்பு அளிக்குமாறு கோரியுள்ளார்.

2. மேலே பத்தி 1ல் உள்ள பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து பகுதி II திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம், மு. பாலாடாவில் உள்ள பழங்குடியினர் ஆய்வு மையத்தின் கட்டிட பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.49.29 இலட்சம் (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து இருபத்தொன்பதாயிரம் மட்டும்) நிதி கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:–

1. இப்பகுதி II திட்டங்களுக்கு என ஒப்பளித்த தொகையினை மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும்
2. இத்திட்டத்தில் செலவினம் போக மீதத்தொகை இருப்பின் அத்தொகையை அரசுக் கணக்கில் உடனடியாக ஒப்படைவு செய்தல் வேண்டும்.

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் – 02 பழங்குடியினர் நலன் – 800 ஏனைய செலவு பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் JB - பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துதல் – 18 பராமரிப்பு –02 சிறப்பு பராமரிப்பு (து.தொ.கு 2225 02 800 JB 1827)

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கு மிகாமல் நடைமுறையில் உள்ள விதிகளின்படி பழங்குடியினர் ஆய்வு மையத்தில் கட்டிட பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ள பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பயன்படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவலல் சாரா குறிப்பு எண்.52736/நிதி(ஆதி (ம) பந)/2011 நாள் 11.10.2011–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம், மு. பாலாடா, உதகை
மாநில கணக்காய்வுத் தலைவர் சென்னை–18/35/6
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35/1
<u>நகல்:–</u>
நிதி (ஆதி(ம)பந/வசெபொII), சென்னை–9.
அமைச்சர் ஆதிதிராவிடர் நலன்அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
செயலர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
உதிரி /இருப்புக்கோப்பு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

24/10/11
பிரிவு அலுவலர்.
24/10/11